00161

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 06

**LLU6813– சட்டவியல்**

இறுதிப் பரீட்சை

காலம் : மூன்று (03) மணித்தியாலம்

திகதி : 02.05.2025 நேரம்: பி.ப 02.00 - பி.ப 05.00

மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 07
**நான்கு (04) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.**
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

**கீழே தரப்பட்டுள்ள சந்தர்ப்பம் வினாக்கள் 1 மற்றும் 2 என்பவற்றுக்கானது.**

2024 டிசம்பரின் இறுதி வாரத்தில், நோவிடாவின் சனாதிபதி யுக்கின் அவர்கள் பாராளுமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டார். 2024 டிசம்பர் 3ஆம் திகதி அன்று நோவிடாவின் அரசியலமைப்பின் உறுப்புரைகளை மீறி, இராணுவ சட்டத்தை கொணர்ந்து தொடர்பான அவரது சர்ச்சைக்குரிய தீர்மானம் காரணமாக நம்பிக்கையில்லா பிரேரணை அவரிற்கெதிராக கொணரப்பட்டது. மேலும், இராணுவச்சட்டம் தொடர்பான பிரகடனத்திற்கு இடையூறு விளைவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை தடுப்பதற்காக பாராளுமன்றத்திற்கு இராணுவப் படைகளையும் அனுப்பியிருந்ததாக சனாதிபதி யுக்கின் குற்றம் சாட்டப்பட்டார். இதேவேளை, சனாதிபதி யுக்கினின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நோவிடாவின் பிரஜைகள் பிரச்சாரம் ஒன்றை ஆரம்பித்தனர். நோவிடாவின் ஊடகங்கள் யுக்கினின் தீர்மானங்கள் நாட்டிற்குள் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தன. எவ்வாறாயினும், யுக்கின் தனது எதிர்வாதத்தில், நாட்டின் பிரஜைகளின் எழுச்சிக்கும் முழு அரசாங்க வீழ்ச்சி ஆபத்திற்குமான அவசியமான பதிலே இக்குறுகிய கால இராணுவச்சட்டத்தின் செயற்படுத்துகை என வாதித்தார். 2025 ஏப்ரல் 4ஆம் திகதி நோவிடாவின் அரசியலமைப்பு நீதிமன்றமானது சனாதிபதி யுக்கினின் மீதான நம்பிக்கையில்லா பிரேரணையை ஏற்றுக்கொண்டது. எட்டு உறுப்பினர்களைக் கொண்ட சபையானது யுக்கினின் இராணுவச்சட்ட பிரகடனமானது அரசியலமைப்பை மீறியதுடன் முறையான சட்டநடபடி முறைகளை பின்பற்றத்தவறி, நீதித்துறை சுதந்திரத்திற்கும் இடையீடு செய்ததென முடிவுசெய்தது. அரசியலமைப்பிற்கு இணங்க இத்தீர்ப்பிலிருந்து 60 நாட்களுக்குள் புதிய தேர்தல்கள் கண்டிக்காக நடைபெற வேண்டும்.

1. (அ) சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் மீது நோவிடாவின் நிலையை பொருத்தமான உதாரணங்களைத் தந்து நுணுக்கமாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) சனாதிபதி யுக்கினுடைய எதிர்வாதத்தின் உள்ளீட்டைக் கருத்தில் கொண்டு இதனை ஒழுக்காற்று ரீதியாக உம்மால் நியாயப்படுத்த இயலுமா என நுணுக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

(15+10 = 25 புள்ளிகள்)

2. (அ) ஒஸ்டினின் கருத்தேற்பிற்கு இணங்க சனாதிபதி யுக்கினின் இராணுவச்சட்டத்திற்கான பிரகடனம் ஆனது "புலனறிவாதச் சட்டம்" என்று வகைப்படுத்தப்பட இயலுமா என நுணுக்கமாக ஆராய்க.

(05 புள்ளிகள்)

(ஆ) புலனறிவாத்தின் உள்ளீடானது சட்டம் ஒழுக்கநெறியிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டியது என்பதை அடிப்படையாக கொண்டமையாகும். இந்நிலைப்பாட்டிலிருந்து சனாதிபதி யுக்கினினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை நீர் எவ்வாறு நியாயப்படுத்துவீர்? ஆராய்க.

(20 புள்ளிகள்)

(05+20 = 25 புள்ளிகள்)

3. 'சட்டவியல் வகுப்புகளில் வரலாற்றுப்பள்ளியானது ' விருத்தியுறாதது என்பதுடன் சிறிது விசித்திரமானதும் ஆகும். சகலரும் அப்பள்ளி தொடர்பில் கண்ணியமாகச் செயற்பட்டதுடன் எவரும் வெளிப்படையாக அதை எதிர்க்கவும் இல்லை, ஒருவரும் அதனை தீவிரமான ஒன்றாக ஏற்கவும் இல்லை. சில எழுத்தாளர்கள் [...] 19ஆம் நூற்றாண்டின் ஜேர்மனிய பல்கலைக்கழகங்களில் அறிவார்த்தமான வாழ்வை அமைப்பதில் அதன் வகிபங்கை குறிப்பிடுகின்றனர். ஏனையோர் இதனை சமூகவியல் சட்டவியல் வகுப்பின் முன்னோடி என ஏற்றுக்கொள்கின்றனர்.'

RE Rodes, 'on the Historical school of jurisprudence' (2004) 49 the American Journal of jurisprudence 165.

மேலுள்ள கூற்றின் அடிப்படையில் வரலாற்றுப்பள்ளி எனும் சட்டவியலின் தத்துவார்த்த புரிந்துணர்வின் சமகால பெறுமதியை நுணுக்கமாக ஆராய்க. தகுந்த உதாரணங்களை வழங்குக.

(25 புள்ளிகள்)

4. 2023 செப்டெம்பர் 17ஆம் திகதி அன்று இரவு கொழும்பு மருதானையின் சிவப்பு விளக்குப் பகுதியின் லோட்டஸ் வீதியில் மூன்று மாடி தங்குமிடத்தில் வாழ்ந்திருந்த "பிந்து" எனப்படும் சமன்மலி சபரமாது எனும் 46 வயதுடைய பாலியல் தொழிலாளியின் படுகொலை பொதுமக்களின் மனசாட்சியை உலுக்கியது. இரவு 9.15 மணியளவில் இரண்டாம் மாடிப்படியில் அமர்ந்து அவள் ஓய்வெடுக்கும் போது குற்றம் சாட்டப்பட்ட சமிந்த கருணாரத்ன என்பவன் அவள் மீது தடுமாறி வீழ்ந்ததுடன், அது வாக்குவாதத்தில் முடிவுற்றது. சமிந்த துரித கோபத்துடன் சமன்மலியை தனது கை முட்டியாலும் முழங்காலாலும் தாக்கியதுடன், அவளது மயிரினைக் கொண்டு பலவந்தமாக இழுத்து ஒரு சுவரின் மீது அவளது தலையை மோதவே, அதிக இரத்தம் வெளியேறியது. வீட்டில் உதவியாளராக இருந்த அயேசா நாமலி என்பவள் இதனை கண்ணுற்றதுடன் ஏனையோர் இதில் தலையிடும் வண்ணம் துரித அபாய அறிவிப்பை ஏற்படுத்தினாள். பலர் ஒன்று கூடி எதிர்ப்புத் தெரிவித்ததால் அவ்விடத்தை விட்டு நீங்கிய குற்றம் சாட்டப்பட்டவன் அதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவளை தொடர்ந்தும் தாக்கியதை பலர் கண்ணுற்றனர். ஐந்து மணித்தியாலங்களின் பின்னர் அதே வீதியில் பொலிஸாரால் அவன் கைப்பற்றப்பட்டான். தேசிய வைத்தியசாலையை அடையும் போதே சமன்மலி மரணித்திருந்ததாக அறிவிக்கப்பட்டது.

இவ்வழக்கின் நீதிபதி நீர் எனக் கருதுக. அமெரிக்க யதார்த்த வாதத்தின் தத்துவார்த்த கோட்பாட்டின் கீழ் சமூக விடயங்கள், நடைமுறை வெளிப்பாடுகள் மற்றும் உண்மை வாழ்வில் சட்டம் எவ்வாறு செயற்படுகிறது முதலானவற்றால் நீதித்துறைத் தீர்மானம் எவ்வாறு செல்வாக்குக்கு உட்படுத்தப்படுகின்றன என பிரதிபலிக்கும் ஒரு நியாயமான தீர்ப்பொன்றை எழுதுக. உமது

நியாயப்படுத்துகையை ஆதாரப்படுத்தும் வண்ணம் தொடர்புடைய தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் சட்ட ஏற்பாட்டுப்பிரிவுகள் முதலானவற்றை நீர் எடுத்துரைக்க.

(25 புள்ளிகள்)

5. காலியின் கடற்கரையோர நகரில் புதிய ஆடம்பர ஹோட்டல் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டு எவ்வித பதிலீட்டு வீடமைப்பும் வழங்கப்படாது குறைந்த நிவாரணத்துடன் தமது மூதாதையரின் காணியில் இருந்து 30 குறைந்த வருமானம் கொண்ட மீனவக்குடும்பங்கள் பலவந்தமாக வெளியகற்றப்பட்டன. எதிர்ப்புகளிற்கும் ஊடக கவனத்திற்கும் மத்தியில் அதிகாரசபைகள் இதனை “சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி” என நியாயப்படுத்தின. இவ்வெளியகற்றுகையை கேள்வியெழுப்பி பொதுமக்கள் நல அக்கறை வழக்கு ஒன்று முன்வைக்கப்பட்டது.

சமூகவியல் சட்டவியல் வகுப்பினூடு இச்சந்தர்ப்பத்தை நுணுக்கமாக ஆராய்க. ரொஸ்கோ பவுண்ட் மற்றும் பிற தொடர்புடைய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் என்பவற்றின் அடிப்படையில் சட்ட உரிமைகள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூகவியல் நீதி என்பவற்றுக்கிடையிலான முரண்பாடுகளுக்கு சட்டம் எவ்வாறு பதிலளிக்கிறது என ஆராய்க. உமது ஆராய்வை ஆதாரப்படுத்துவதற்கு தேவையான பொருத்தமான சட்ட ஏற்பாடுகள், வழக்கு உதாரணங்கள் மற்றும் நடைமுறை உலக உதாரணங்கள் என்பனவற்றைக் குறிப்பிடுக.

(25 புள்ளிகள்)

6. ஹான்ஸ் கெல்சனின் தூயசட்டக் கோட்பாடு ஆனது விதிகளின் பதவணி ஒன்றின் உச்சத்தில் ஒரு அடிப்படை விதியை (குறுண்ம விதி – Grundnorm) குறித்துரைத்து சட்டத்தை ஒழுக்கநெறி, அரசியல் மற்றும் சமூகவியல் என்பனவற்றில் இருந்து வேறுபடுத்த முயற்சிக்கிறது. சட்டம் சமூக, ஒழுக்க அல்லது அரசியல் செல்வாக்குகளிலிருந்து சுதந்திரமான விதிகளின் முறைமை ஒன்றாக புரிந்துணரப்பட வேண்டும் என்ற கெல்சனின் வாதத்தை நுணுக்கமாக ஆராய்க. உமது விடையில் இவ்விதியானது நடைமுறையில் சட்டம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை போதுமான வகையில் விளக்குகிறதா என கணிக்குக. உமது ஆராய்வை இலங்கையில் இருந்தும், உமது தெரிவில் வேறு ஏதேனும் ஒரு நியாயாதிக்கத்திலிருந்தும் பொருத்தமான உதாரணங்களுடன் ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

7. “மாக்சிச கோட்பாடு ஆனது புதிய மற்றும் பல்வேறு பொருத்தப்பாடுகளுள் மீள்பணியாற்றும் கணிசமான பொதுவான தலைப்புகளை வெளிக்காட்டுகிறது. மொத்தத்தில் மாக்சிச எழுத்துக்களிலும் தொடர்ந்து வந்த சட்டத்திற்கான மாக்சிச அணுகுமுறைகளிலும் காணப்படும் பிரதான தலைப்புகள் ஆனவை : சட்டம் நடைமுறையில் உள்ள பொருளாதார உறவுகளை கண்ணாடி போல வெளிப்படுத்துவதாக அல்லது வெளிப்படையாக எடுத்துரைப்பதாக உள்ளது”

Hunt, Alan. ‘ Marxist theory of law.’ (2010) A companion to philosophy of law and legal theory, 350-360.

இக்கூற்றுடன் உடன்படுகின்றீரா? சட்டத்தின் மாக்சிச கோட்பாட்டின் சமகால பிரயோகத்தை பொருத்தமான உதாரணங்களுடன் நுணுக்கமாக ஆராய்க.

(25 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -